ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 0-2-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 28—11—43 சுபானு கார்த்திகை 13—ஞாயிறு | இதழ் 37.

நே—4.

தோழர்

கலியாணசுந்தர முதலியாருக்கு

கைவல்யம் கடிதம்.

தாங்கள் படிப்பிலும், உலக விவகாரங்களிலும், அதிலுள்ள ஆலோசனை சக்தியிலும் மேற்பட்டவர்களென்று தங்கள் சிநேகிதர்கள் நினைப்பது போலவே நானும் நினைக்கிறேன். சொல், எழுத்து, அடக்கம், இனிமை, சாதுரியம் முதலிய லட்சணங்களில் சிறந்தவரென்று தங்களை அபிமானிப்பவர்கள் மதிப்பதுபோலவே நானும் மதிக்கிறேன். அப்படி இருந்தும் கடிதமெழுதுகிறேன், குற்றமும் சொல்லுகிறேன். தங்களை விசேடமாக நினைப்பதுபோலவே, குற்றமும் பெரிதாக்கப்படுகிறது. ஏனெனில் தங்கள் புத்தியின் வார்த்தை நியாயமில்லாததாக இருக்கிறது. நாங்கள் சொல்லுவது உண்மை நியாயமென்பது தங்களுக்குத் தெரியாததல்ல, எங்கள்பேரில் இனிமை காணப்படுவதையும் நாங்களறிவோம் என்றாலும் மாமூலாகிய செக்கைச் சுற்றிச்சுற்றி அதிலே மகத்தான லௌகிக பாண்டித்யமடைந்துவிட்ட தங்கள் பேச்சு எங்கள் எதிரிகளுக்கு உதவியாகவிருக்கிறது. அதற்காகவே அவர்கள் உங்களை உபயோகிக்கிறார்கள். நீங்களும் அதற்கேற்றாற்போலப்பேசுகிறீர்கள். எத்தனைபுகழ்மாலை கழுத்தில்விழுந்தாலும் எங்கள் தோட்டத்துப் பூவென்பது தங்களுக்கும் தெரியும் தமிழ் நாட்டுக்கும் தெரியும்.

தமிழ்மொழியின் மூலமாக வகுப்புவாதத்தைப் புகுத்துகிறவர்களை அடியோடு தொலைக்க தோழர் T. T. கிருஷ்ணமாச்சாரியார் தங்களைக் கேட்டுக்கொள்கிறார். கலையுணர்ச்சி கற்றவர்களிடமே வகுப்புவாத மேற்பட்டிருக்கிறது. பெண்கள் கிளர்ச்சியும் தொழிலாளிகள் கிளர்ச்சியும் வேண்டும், ஆத்மார்த்தக் கலையுணர்ச்சியும் வேண்டுமென்று தாங்கள் பதில் சொல்லுகிறீர்கள். அதுசரியான பதில்தானா? படிப்பு, புத்தி ஆராய்ச்சி, தேசபக்தி, அடக்கம், சாதுத்தன்மை, குழந்தைமனம் முதலியவைகளால் புகழப்படும் தங்கள் சொல்லில் சத்தியம், நியாயம், அனுபோகமான பிரத்தியட்சம் ஒன்றையும் காணோமே? என்பதை எடுத்துக்காட்டவே கடிதங்கள் எழுதுகிறேன்.

என்று தமிழ்நாட்டிற்கு வடமொழி வந்ததோ அன்றுமுதல் தமிழ்மொழியை இழிவுபடுத்தி அதற்குவேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து, சூத்திர பாஷையைத் தொட்டால்பாவம்கேட்டால் நரகம் என்பதாகத் தள்ளிநடப்பது நாடெல்லாம் பிரத்யட்சமாக விருப்பது தங்களுக்குத் தெரியுமே, அதனால் தாங்கள் சொல்லவேண்டிய பதிலைக் கீழே சொல்லுகிறேன்.

ஐயா, ஆச்சாரியார் அவர்களே! உங்கள் கூட்டத்தார்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். அரசர்களையும்மற்றப்பெரியதனக்காரர்களையும் பல விதத்தால் கொன்றும் அழித்தும் வணங்கச்செய்தும் பகையை உண்டுபண்ணியும், பாரமார்த்தீகமென்று பயமுறுத்தியும், தமிழ்நாட்டாரை எல்லாம் சூத்திரர்கள் என்றார்கள். சூத்திரனென்பதற்கு இந்தக் காலத்திலேயே அநேகருக்கு அர்த்தம் தெரியாது, அந்தக் காலத்தில் சூத்திரனென்பதற்கு அர்த்தம்தெரியாததில்ஆச்சரியமில்லை. கல்வியும், விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாதென்று விதிபோட்டார்கள், விதியை மீறினவர்களை சித்திரவதைசெய்து கொன்றார்கள். விதியை மீறின சூத்திரனை விஷ்ணுவான இராமரே தன் கையாலே கொன்றார் என்று அரசர்களுக்கு மேற்கோளும் காட்டினார்கள், அதற்காகவே இராமாயணமும் எழுதினார்கள்.

அப்படி இருந்தும் சிலர் நாங்கள் எப்படிச் சூத்திரர்கள் என்றுகேட்டார்கள். கடவுளால் சொல்லப்பட்ட வேதத்திலிருக்கிறது என்றார்கள். சில தமிழ்ப்பண்டிதர்கள் அழுத்தமாகக் கேட்டார்கள். நீங்களெல்லாம் சற்சூத்திரர்களென்று அவர்களுக்குச்சொன்னார்கள். பயத்தின்கொடுமையாலும் பக்தியின் வேகத்தாலும், சிலபண்டிதர்கள் அதோடு நின்றுவிட்டார்கள். என்னைப்போன்ற சில பண்டிதர்கள், அவர்களுக்கு அது, இவர்களுக்கு இது, என்கிற சமரசசன்மார்க்கத்தில் நின்று உங்கள் ஏற்பாட்டின் வசைப்பின்பாட்டிற்குப்பக்கவாத்தியமானார்கள். அதற்கும் இணங்காத பண்டிதர்களைப் பிராமண துவேஷி, வேதநிந்தகன், நாஸ்திகன், சாஸ்திரத்திற்குத் தர்க்கம் பேசுகிறான், இதனால்தான் மழை சரியாய்ப் பெய்வதில்லை, இராஜாபெண்சாதிக்கு காச்சல், பெரியதனக்காரரின் பிள்ளை செத்தது, மணியகாரின் மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு போய்விட்டார் இப்படி நடக்கும் உல்ககாரியங்களையெல்லாம் அவர்கள் தலையில்போட்டு தர்மம்கெட்டு அதர்மம் வந்துவிட்டதால்தான் இந்த அனியாமெல்லாம் நடக்கிறதென்று சொல்லி உண்மைக்குப் பரிந்துவந்த பண்டிதர்களை ஒழித்தேவிட்டார்கள். அன்று முதல் தெய்வத்தின்பேரால், சமயத்தின் ஏற்பாட்டால், சாஸ்திரத்தின் பிரமாணத்தால், அதிகாரத்தின் கொடுந்தண்டனையால், உங்கள் முன்னோர்கள் கட்டின வசைப்பின் தந்திரத்தால், தமிழ் தடுக்கப்பட்டு நிந்திக்கப்பட்டு தாழ்த்தப்பட்டது. அதற்குமேல் பழய இராஜாக்களின் குறுகிய காலத்தில் உங்கள்கூட்டத்தாரின்சாஸ்திரக்களஞ்

(8ம் பக்கம் பார்க்க)

தமிழ் இசையும், தமிழ் நாடும்!

—) இங்கர்சால். (—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பிறந்த தமிழிசை இயக்கம் ஆரம்பித்து இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகின்றது. தமிழ் இசை இயக்கத்தை உண்மையிலே போற்ற வேண்டியதுதான். தமிழிசை இயக்கம் உறங்கியிருந்த தமிழரை விழிப்படையச் செய்தது. இசை என்பது இன்னது என்று தெரியாத மக்களைத் தெரிய வைத்தது. தமிழ் என்பதுகூட ஒன்று இருக்கின்றதா என்றுநினைத்த மக்களை உணர வைத்தது. இருந்த தமிழிசை என்மறைந்தது என்று சிந்திக்கத்தூண்டியது. கோவலனும் மாதவியும், குதூகலத்துடன் பாடி மகிழ்ந்த தமிழிசை, பாண்டியனின் பாங்கிகள் பாண்டியனின் குமாரிகளைப்பாடி மகிழ்வித்த தமிழிசை, சேரநாட்டுச் சிறுமிகள் பாடிய தமிழிசை என்மறைந்தொழிந்தது? முடியுடைய மூவேந்தர் ஆண்டகாலையில் இருந்த இசைக்கருவிகள் இன்று மறைந்ததின் மர்மம் என்ன? என்பன போன்று சிந்திக்க தூண்டியது தமிழனை, தமிழிசைக் கிளர்ச்சி. தமிழ் இசை இயக்கத்தை வகுப்புவாதமென்று அடக்கி, ஒடுக்கி, அழிக்க முற்பட்ட தருதலைகளை மட்டந்தட்டியது தமிழிசைக் கிளர்ச்சி. இசைஅரங்கென்றால் தெலுங்குப்பாட்டுகள் என்றிருந்த காலம்போய், முழுவதும் தமிழ்ப்பண்புடன் இயைந்த தமிழ்ப்பாட்டுகள் கமழும் சோலையாகக் காட்சி தருகின்றது இன்று தமிழ் நாடு.

இசையே தமிழனுக்குரிய சொத்து. எப்படி "ழ"கரம் தமிழ்மொழிக்கே உரியதோ, அவ்வாறே இசையும் தமிழனுக்கே உரியது. அதனால்தான் இயல் இசை, நாடகம்என்று மும்மணிகளைக் கொண்ட முத்தமிழ் நாடாக விளங்கியது தமிழ்நாடு. தமிழர்கள் இயற்கையாகவே நுணுக்கங்களை நன்கறிந்தவர்கள். இசை நுணுக்கங்களை அறிந்த இசை ஆராய்ச்சியாளர்கள் அக்காலத்தில் தமிழ்நாட்டில் அதிகமாக இருந்து அரசர்களால் போற்றிவளர்க்கப்பட்டார்கள் என்று பண்டை நூல்களின் வாயிலாக அறிகின்றோம்.

வண்டுகள், சோலையிலுள்ளமரக்கிளை, கொம்புகளை, கொடிகளை துளைப்பதினால் உண்டான துளைகளில் காற்றுப் பலமாக வீசுவதினால் உண்டாகும் இனிய ஓசைகளைக்கண்டறிந்து குழல் போன்ற துளைக்கருவிகளைக் கண்டனர் தமிழர்கள். வில்லில் இணைக்கப்பட்ட நரம்புகளை இழுத்து அம்புகளை எய்வதினால் உண்டாகும் இனியஓசைகளைக் கண்டறிந்துயாழ் போன்ற நரம்புக்கருவிகளைக்கண்டனர்நம்மூதாதையர். காட்டிலே வேட்டியாடிக் கொன்ற புலி, மான் முதலிய மிருகங்களின்தோல்களைக்கரம்கொண்டுஅடிப்பதினால் உண்டான ஓசையைக் கண்டு பேரிகை போன்ற தோற்கருவிகள் கண்டார்கள். இசையை நம்உயிரென ஓம்பி வந்தனர் தமிழர். இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த தமிழ் இசை, முத்தமிழ் மணிகளில் ஒன்றாயிருந்த தமிழிசை மறைந்தொழிந்ததின் காரணம் என்ன? இதற்கு ஒரே ஒருபதில் தான். ஆரிய உறவால் அழிந்தது தமிழ் இசை. இதைத்தவிர வேறு இருக்க முடியாது. அதற்கு ஆதாரம், மறைந்த தமிழிசையைப்பழய மாண்புடன் திகழ முயற்சிகள் நடக்க ஆரம்பித்ததும், ஆரியத்தாள்களாகிய "இந்து"வும் "மித்திரனும்" தானேஎதிர்த்துத் தலையங்கங்கள் எழுதின!

தமிழனுக்குத் தமிழ்நாட்டில் தமிழர் கழகங்களில், பொது நிலையங்களில் தமிழர் திருவிழாக்களில், தமிழர் முன்னிலையில் தமிழில்பாடி மகிழ உரிமையில்லையென்றால், இந்நாடு இருப்பதைவிட அழிவதுமேல் என்பேன். தங்கள் இனப்பெருமையை நிலைக்கவைக்கத்-தங்கள்ஆதிக்கம் அழியாமலிருக்கத் தமிழரை அடக்கிஆள, தமிழர் உணர்ச்சி பெறாமலிருக்க, தமிழிசைஇயக்கத்தை மறைமுகமாக வகுப்புவாதமென்னும் மூலாம்பூசி எதிர்த்தார்கள்; தோற்றார்கள். இப்போது தமிழ்நாடெங்கும் தமிழிலேயே பாடப்படுகின்றது. இது ஆரியத்தின்மீது தமிழர் கண்டவெற்றிகளில் ஒன்று. முதலில் கட்டாய இந்தி ஒழிந்தது. அடுத்தது தென்னிந்திய இரயில்வே கம்பெனி உணவு விடுதியில் பேதஒழிப்பு. அடுத்தது தமிழிசை வளர்ச்சி. எங்கும்கண்ட விடமெல்லாம் ஆரியத்திற்கு அடியேகிடைத்து வருகின்றது, மேற்கே நாஜிகளுக்குக் கிடைப்பது போல!!

பாடல்கள் பெரும்பாலும் கடவுள் பாட்டுகளே! தமிழ்மொழியைப்பற்றி, தமிழ்நாட்டைப்பற்றி, தமிழர் இருக்கும் நிலையைப்பற்றி, அவர்கள் முன்னேற வேண்டிய விதிகளைப்பற்றிப் பாடியதைக் கேட்டதில்லை, அல்லது பாடினதாக எவராவதுசொன்னதைக்கூட நான்கேட்டதில்லை. இசை அரங்கு என்றால் கடவுள்பாட்டுகளாகவே இருக்கவேண்டும் என்ற நிலை மாறவேண்டும். இயற்கைக் காட்சிகள், சூரியன், சந்திரன், மலை, ஆறு, காடு, நந்தவனம், ஆடும்மயில், பாடும்குயில், கூவும்கிளி, தென்றல், மழை, கானல், குளிர்ச்சி, மின்சாரம், விஞ்ஞானம், மாதர்நிலை, மாந்தர்நிலை, அவர்களைச் சுற்றியுள்ள உலகின்நிலை, இவற்றைப்பற்றிப் பாடவேண்டும். இசைவாணர்கள் இவைகளைப்பற்றிப்பாட நினைப்பதுகூட இல்லை. நினைத்தாலும் பாட முயற்சிப்பதில்லை. பாடமுயற்சித்தாலும் பாடக்கூசுவது. பாடினால் தன்க்குள்ள [illegible]ம அற்றுப்போகுமாம்! மக்கள் மதியாராம் இவர்களை. இம்மாதிரியான கூற்றுகளைக் கூறுகிறார்கள். என்னே இவர்கள் சந்தேகம்! தமிழிலே கடவுள் பாட்டுகளை, அதுவும் சைவ, வைணவக்கடவுள்களை மட்டும் பாடவேண்டும்மற்றவைகளைப்பற்றிக்கூறும் பாடல்கள் பாடல்கள் அல்ல, கடவுள் பாட்டுகளை,ஆரியக்கடவுள்களின் பாட்டுகளை, ஆரிய ஆபாசக்கதைகளை விளக்கும் பாட்டுகளை, மூடநம்பிக்கையும், குருட்டுக்கொள்கையும் கொண்ட பாட்டுகளை, அறிவை, பகுத்தறிவை, தன்மானத்தைப்பாழ்படுத்தும் பாட்டுகளை பாடுவதற்கே தமிழிசை உபயோகப்படவேண்டியிருந்தால் தமிழிசை ஒழிவதுமேல். தமிழிசையினால் தமிழர் உயர்வர் என்று எண்ணின உள்ளங்களைப் உடைத்துவிட்டது இப்போது நடக்கும் தமிழிசை அரங்குகள். சர்க்கரை கலந்த பால்என்று தமிழர் எண்ணித் தமிழிசையைப் பருகினர். ஆனால் விஷம்கலந்த பாலாக இருப்பதாக அறிகின்றோம். இன்றும் அந்த விஷம்கலந்த பாலைப்பருகவேண்டுமா தமிழர்? தமிழர் குருதியெல்லாம் ஆரிய நஞ்சுசேரவேண்டுமா?வேண்டாமப்பா வேண்டாமப்பா, போதும் போதும், படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும் என்று பாடவேண்டிய நிலையிலிருக்கிறோம், தமிழிசையைப் பொறுத்தவரையில்.

தமிழிசை வாணர்களே, தமிழகத்தின் நலங்கருதி, தமிழ்மொழி வளர்ச்சி கருதி, தமிழர் முன்னேற்றங்கருதி நான் கேட்பது என்னவென்றால், இன்றுமுதல் கடவுள் பாட்டுகளை பாடும்பழக்கத்தை விட்டுவிடுங்கள். அறிவுக்கொத்த பாடல்களை, தமிழர் முன்னேற்றங்கருதும்பாடல்களை நான் மேலேகூறியுள்ள இயற்கைக்காட்சிகள் முதலியவைகளைப்பற்றின பாடல்களை; மூடநம்பிக்கையை, குருட்டு

(8-ம் பக்கம் பார்க்க.)

மட்டரகம்

பரதன்.

"அந்த ஒட்டகத்துக்கு, ஒருகால் ஊனமல்லவா?"

"ஆமாம்"

"ஒருகண் பொட்டை"

"ஆமாம், ஒருகண் குருடுதான்!"

"பற்களிலே சில உதிர்ந்துவிட்டிருக்கும்."

"அடையாளம் சரியாக இருக்கிறது சுவாமி! தாங்கள் கண்டீர்களோ, என் ஒட்டகத்தை. அது காணமற்போய் இரண்டு நாட்களாகிவிட்டன."

"நானா? உன் ஒட்டகத்தை நான் கண்டதே கிடையாதப்பா!"

"நொண்டி, குருடு, பல்போனது, என்று சர்வஅடையாளமும் சரியாகச் சொல்கிறீர், நீர் ஒட்டகத்தைப்பார்க்காது எப்படி இவைகளைத் தெரிந்து கொண்டிருக்க முடியும்? கள்ளனே! என் ஒட்டகத்தை நீதான் திருடிக்கொண்டாய், எங்கேயோ ஒளித்து வைத்துக்கொண்டிருக்கிறாய்."

சாது, இக்கடுமொழிகேட்டுச் சிரித்தார். ஒட்டகையைப் பறிகொடுத்தவனோ ஓங்காரக்கூச்சலிட்டான். காணமற்போன ஒட்டகையைத் தேடிக்கொண்டு அவன் போகையிலே, சாதுவை ஒரு சாலை ஓரத்திலே கண்டான், கண்டீரோ, ஒரு ஒட்டகையை என்று கேட்டான். சாதுவுக்கும் அவனுக்கும் நான் மேலே தீட்டியபேச்சு நடந்தது. இவ்வளவு நுட்பமாக அங்க அடையாளங்களையுங் கூறிவிட்டு, ஒட்டகத்தை நான் காணவில்லை என்றுங் கூறினால், பறிகொடுத்தவன் மனம் பதறாதா! அவன் ஆத்திரமடைந்தான். சாது, பிறகு கூறலானார், "அப்பா! உண்மையிலே நான் உன் ஒட்டகத்தைக் கண்டதில்லை. ஆனால் அதன் அங்கஅடையாளங்களை நான் தெரிந்துகொண்டது, யூகத்தாலேதான். இதோபார், பாதையை, ஒட்டகம் சென்ற காலடிகள்! இதிலே, ஒரு காலடி மட்டும் சரியாகப்பதியவில்லை; எனவேஅதற்கு ஒருகால்ஊனம் என்று யூகித்தேன். சாலையோரத்திலே தழை மேய்ந்துகொண்டே ஒட்டகம் சென்றிருக்கிறது. அடையாளம் பார் தெரியும். தழைமேய்வதிலே, சிலசில இடங்கள் மெல்லப்படவில்லை. அதிலிருந்து ஒட்டகத்துக்குச் சில பற்கள்உதிர்ந்துவிட்டன என்று தெரியவில்லையா? மேலும் சாலையின் ஒரு ஓரமாகமட்டுமே மேய்ந்திருக்கிறது. கண் ஒன்று குருடாக இருப்பதால், இதுநடந்திருக்கிறது என்பது யூகந்தானே! பைத்யக்காரா, இன்னும்கேள்! அது பேரீச்சம் பழமூட்டையுடன் சென்றிருக்கிறது. இதோ பார் கீழே இரண்டொருபேரீச்சம்பழமும், அவ்வழியே சாரை சாரையாக எறும்புகள் செல்வதையும். இதுபோல யூகித்துச் சொன்னேனே யன்றி, கண்டதில்லை உன் ஒட்டகத்தை. சாதுகூறிய இம்மொழிகேட்டவன், உண்மையை உணர்ந்து, "ஐயா! ஒட்டகத்தை இழந்தேன், ஆனால் பெட்டகத்தை இழந்தாகிலும் தங்களுக்குள்ள பெருமதியைப் பெற்றால் நஷ்டமில்லை" என்றுகூறிச் சாதுவை வணங்கினானாம்.

முந்திய இதழிலே, நன்னிலம் நண்பருக்கு நான்விடுத்த மடல், நேயர்கட்குத்தெரியும். அவர் என் பதிலைப் படித்ததும், மீண்டுமோர் கடிதம்விடுத்துள்ளார்—கோபத்தால் அல்ல, "குளிர்ந்தமனதுடன்." இது அவருடையவாசகம்! அதிலே அவர், "என்ன ஐயா! என்னைத்தாங்கள் தெரியாதிருந்தும், ஏதோ ஒருஉருவத்தை என்னைப்போல நினைத்துக்கொண்டு, பரதேசிக்கு என்னை ஒப்பிட்டு, எழுதினீரே" என்று எழுதிக்கேட்கிறார். கண்டதில்லைத்தான், ஆனால், காணாத ஒட்டகைக்கு அடையாளம்கூறிய சாது போல, நானும் யூகித்தே, அந்த நன்னில நண்பருக்குப் பதில்விடுத்தேன். அவர்சாயவேட்டிக்காரராகவோ, சடைமுடிதரித்தவராகவோ இல்லாதிருக்கலாம், கதர்வேட்டியும், நாகரிகவிபூதிப் பூச்சும் உடையவராக இருக்கலாம். ஆனால், அவருடைய நினைப்பு, நான் முன்பு தீட்டியதற்கு அதிக மாறுபட்டதாக இருக்கமுடியாது! அதுநிற்க. இம்முறை அவர்விடுத்த மடலுக்குப் பதிலளிக்க நேயர்கள் அனுமதி தரவேண்டுகிறேன்.

நன்னிலத்து நண்பா! என் கடிதம் கண்டு மனங்குளிர்ந்ததாக எழுதியுள்ளாய், என்னிடம் நட்பும் மதிப்பும் கொண்டிருப்பதாக நவில்கிறாய், எந்தக்காலத்திலும் என்னிடம் உமக்கு விரோதபுத்தி உண்டாகாது என்று நான் உறுதியாக நம்பவேண்டுமென்றும் கூறுகிறாய், மெத்தச்சரி, வந்தனம், சந்தோஷம். ஆனால் ஒன்று கவனித்தாயா, எங்கே, உன் மீது எனக்குச் சந்தேகமும், அதனால் சஞ்சலமும்வந்துவிடுமோ என்று நீ அஞ்சுகிறாய், அதுவிளைவானேன்? பாலில் துளியும் நீரில்லை என்றுகூறும் பால் விற்பவனிடமும், அசல் வெண்ணெய் காய்ச்சிய நெய்என்றுஅழுத்தந்திருத்தமாகக்கூறும் கடைக்காரரிடமும், சூதவிலே சந்தேகம் இல்லை யென்றாலும் அவர்கள் தங்கள் சரக்கின் உயர்வைப் பன்னிப்பன்னிக்கூறினால், வாங்குபவருக்குச் சந்தேகம் வலுக்கும். அதுபோல, நீர், உமது நட்பை, கபடமற்ற உள்ளத்தை, கனிவை, சகோதரத் தன்மையைப்பற்றிக் கூறிக்கூறித்தயவு செய்து சந்தேகத்தைக் கிளறவேண்டாம். நமக்குள் முன்பு ஏதேனும் விரோதமா, இப்போது, நட்பைப் பற்றி நீர் அறிக்கைவிட!

எனது உபமான உபமேயங்களைக் கண்டு வருந்தாதீர். அவை புண்ணுக்கு மருந்து பூசிக்கொண்டு மினுக்கும் புனுகல்ல! கண்ணுக்குளட்டி, காட்சிதான், உண்டாலோ, உயிருக்கே ஆபத்து. பலாவோமுட்போர்வை, உள்ளேயோ உன்னதமானருசி. ஆனால், சுளையை எடுக்கும் பக்குவம தெரியாவிட்டாலோ, கைகளிலே பிசின் ஒட்டும். அதுபோலத்தான் விஷயவிளக்கத்துக்கான விவாதமும். தொட்டால் துவளுவதோ, துடிதுடிப்பதோ கூடாது. ஆரஅமர யோசிக்கவேண்டும்.

தாங்கள் பல புராணங்களையும் இதிகாசங்களையும் படித்தவரையில், அவைகளிலே பார்ப்பனர் தூஷிக்கப் பட்டிருக்கின்றனரா? என்றுகேட்கிறீர், நண்பரே! இந்தக்கேள்வி, எனக்கு உம்மிடம் முதலில் உண்டான "காதலை" [காதல் என்ற பதத்தைக்கண்டு பயப்படாதீர்]க்குறைத்துவிட்டது! பார்ப்பனியத்தை நாங்கள் கண்டிக்கிறோம், பார்ப்பனியம் என்றால், பார்ப்பனரின் சொல், செயல், சிந்தனை, நடை உடைபாவனை, அவர்களின் முற்கால தற்கால நிகண்டுகள், அந்த நிகண்டுகளால் உண்டான நிலைமைகள், ஆகியவற்றின் கூட்டுச் சரக்கு என்றுபெயர்! பார்ப்பனியத்தைக் கண்டிக்கிறோமென்றால், அதிலே முதல் இடிபெறுவது, புராண இதிகாசங்கள். ஏனெனில் அவை ஆரியஏடுகள், ஆரியத்தை வளர்க்கக் கோர்க்கப்பட்டவை, இன்றும் மக்களிடை மனமாசு மலைபோல் குவிய இவைகளே பயன்படுகின்றன. இந்த ஏடுகள் ஆரியர் உயர்ந்தோர் என்றும், தமிழர் தாழ்ந்தோர் என்றும் கருத்து நிலைக்கவே எழுதப்பட்டன. விஷயம் இதுவாயிருக்க, நீர் புராண இதிகாசங்களிலே, பார்ப்பனர் தூஷிக்கப்பட்டிருக்கின்றனரா, என்று கேட்கிறீரே, கேள்வி பொருத்தமில்லையே! உப்பு விற்கும் கடைக்குச்சென்று பருப்புக் கேட்கிறீரே! பார்ப்பன ஏடுகளிலே பார்ப்பனியத்தின் கண்டனம் கிடைக்குமா! எதிலே எதைத்தேடுவது? உண்மையைக்கூறுகிறேன், கேள்வி ரொம்ப, மட்டரகம்! உம்மை, என்னிடம் காட்டிக்கொடுக்கிறது அந்தக் கேள்வி. ஹிட்லர் எழுதிய மீன்காம்ப் புத்தகத்திலே ஜெர்மன் மக்கள் கண்டிக்கப்படுவரா? சர்ச்சிலின் புத்தகத்திலே பிரிட்டிஷார் கண்டிக்கப்படு

4-ம் பக்கம் பார்க்க.

மட்டரகம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வரா? சனாதனிகளின் ஓலைகளிலே, பார்ப்பனியம் கண்டிக்கப்பட்டிருக்குமா? இதைத்தெரிந்துகொள்ளப்புத்தி தீட்சண்யம் தேவையில்லையே, புத்தி மட்டுமே இருந்தால் போதுமே. நண்பரே உங்கள் தமிழர் நூற்கள் பார்ப்பனியத்தை இகழ்கின்றதா என்று கேட்கிறீர். தமிழன் பெருங்குணம் படைத்தவன். குன்றெடுக்கும்நெடுங்தோளான், கொடைகொடுக்கும் கையான், குள்ளநரிச்செயல்புரியமாட்டான். இகழவோ, இன்னல் விளைவிக்கவோ, தமிழன் துணிந்திருந்தால், நண்பா, நாட்டிலே இன்றுள்ள பிரச்னையே, இருந்திராது. வெள்ளை உள்ளம்கொண்ட தமிழன், நெடுநாட்கள், ஆரியரை, அகதிகள் என்று கருதியே ஆதரித்தான். ஆரியத்தின்உண்மை உருவம் வெளிப்பட்ட பிறகே, கண்டித்திருக்கிறான். தமிழன் மட்டுமல்ல, வேறுநாட்டு விற்பன்னர்களும், பார்ப்பனரின் இயல்புகளைக் கண்டித்திருக்கின்றனர். சின்னாட்களுக்குமுன்பு, நான் எழுதினேன் ஆபிடியுபாவின் விமரிசனத்தை, படித்துப்பார். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை முதலிய ஏடுகளிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பல பாடல்கள் உண்டு, கேட்டுப்பார். மேனாட்டு ஆராய்ச்சியாளர்களின் ஏடுகளை, அடிக்கடி நான் எடுத்தெழுதி வருவேன், தொடர்ச்சியாகப்படித்துக் கொண்டுவா, அந்த விஷயத்தில் தெளிவுபிறக்கும். பாட்டின் எடுப்பிலே தவறுஏற்பட்டால், முடிவுவரை தவறுதானே விளையும். ஆரம்பத்திலே கோணல் என்றமொழி தெரியுமே. அதுபோலக்கடிதத்திலேமுதலிலேயே, அபத்தக் கேள்வியைத் தீட்டினதால், போகப்போகக், கேள்விகளின் தரம் கெட்டுக்கொண்டே இருக்கிறது.

நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் தற்பொழுது கொண்டாடும் கம்பர் போன்ற பெரும்புலவர் பார்ப்பனரைத் தூஷித்தனரா?-என்று கேட்கிறீரே, நண்பனே, உன்னை நான் எந்த சிகிச்சைச் சாலைக்கு அனுப்புவது! கண்பழுதிருந்தாலன்றி, நாங்களும் எங்கள் கூட்டமும், கம்பன் ஒருஆரியதாசன் என்று எழுதும் கட்டுரைகள் தெரியாதிருக்கமுடியாது. மந்தம் செவிக்கு இருந்தாலன்றி, கம்பஇராமாயணம் ஒழிக!! கம்பஇராமாயணத்தைக்கொளுத்துவோம்என்று நாங்கள் முழக்கமிடுவது, யாருக்கும், கேட்காமலிராது. சித்தசுவாதீனமிருக்கும் எவருக்கும், நாங்கள் கம்பனின் புலமை ஆரியக் கோடாரிக்குக் காம்பு ஆயிற்று என்றுகூறிக் கண்டிக்கும் கூட்டத்தினர் என்பது புரியும். நாங்கள் கம்பனைக் கண்டிக்க, நீர், எங்கள் சொல் கேட்டு, ஏடுபடித்து, நட்புக்கொண்டவன் என்று கூறிக்கொண்டே, அதனைத் தெரிந்துகொள்ளாதிருந்தால், நான் உம்மை, அனுப்பக், கண் காது மனம் எனும் மூன்றுக்கும் ஏககாலத்திலே சிகிச்சைதரக்கூடிய சாலையையன்றோ தேடவேண்டும், எங்கே கண்டு தேடுவேன்!!

கம்பன்மீது நாங்கள் சாட்டும் குற்றமே, பார்ப்பனரின் உயர்வுக்கு ஆதாரமான நூலை எழுதினார் என்பதுதான். நீர், கம்பன், பார்ப்பனரைத் தூஷித்தானா, நீங்கள் கண்டிக்கிறீர்களே, என்று கேட்கிறீரே, பொருத்தமா, யோசியும். குடிகெடுத்து, இனப்பெருமையை அழித்து, எதிரியிடம் அடைக்கலமாகி, ஆரியத்துக்கு அடைப்பம் சுமந்த கம்பரைக் கண்டிக்கும் என்னிடம், நீர், கம்பனினும்மிக்கார் உளரோ என்று கேட்கிறீர். ஆஹா! தாராளமாக!! இன்றும், கம்பனைவிடக் குறைந்சகூலிக்கு, ஆரியரின் பாதத்தைத்தாங்கும் ஆழ்வார்கள் இருக்கிறார்கள். கம்பனாவது ஆழ்வார் என்ற பட்டப்பரிசு பெற்று, அந்தக் காரியத்தைச் செய்தான். இன்று சிலர், ஆரியதாசராக இருப்பதுடன், அந்த வேலையைச் செய்வதற்குத் தாங்களே ஆரியருக்குக் காணிக்கை தருகின்றனர் என்றால், அவர்கள் கம்பரைவிடக் கம்பவேலையிலேமிக்கார்தானே! அவராவது, தமக்கிருந்த அபாரமான புலமையை வைத்துப் பேரம்பேசினார், இன்றுசிலர் கம்பனுடைய புலமையை ரசிக்கும் கலைவாணர் நாங்கள் என்று கூறிக்கொண்டு, கம்பகாரியத்தைச் செய்கின்றனர்! அந்தக்கள்ளிகளே, திராவிடப் பூங்காவைப் பாழாக்குகின்றன!!

தமிழ் வளர்த்த அகத்தியரே கண்டித்தாரோ?-என்றும் கேட்கிறீர். சறுக்கு நிலத்திலே தவறியவன், சரசரவெனக் கீழே வீழ்வதுபோலக், கோளாறான கேள்வியிலே கடிதத்தைத் துவக்கினீர், இடறி இடறிக் கீழே வீழ்கிறீர், அதைத்தான் நான் எடுத்துக் காட்டுகிறேன், வேறொன்றுமில்லை. அகத்தியர் தமிழ் வளர்த்தார் என்ற பொய்யுரைக்கு மெய்யுரைகூறுவேன் கேளீர். அகத்தியர் தமிழைக் கற்றார், வளர்த்த குருமுனியல்ல அவர். எந்தப் புராணங்களைச் சாட்சிக்கு அழைத்து, அகத்தியரின் குருத்தன்மையை நிலைநிறுத்தப் பார்க்கின்றனரோ, அதேபுராணத்தின் ஆதாரத்தாலேயே, நான் என் மெய்யுரைக்கு அரண் அமைக்கிறேன், காணீர்.

வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்துவிட்டதாம் ஒரு காலத்திலே. இந்தியாவை, விறகு எடைபோடும் தராசு என்றோ, வயலுக்கு நீர்இறைக்க உபயோகமாகும் ஏற்றக்கோல் என்றோ எண்ணிய ஏமாளியின் புளுகு அப்புராணம், கிடக்கட்டும். அதையேசற்று அலசுவோம். இங்ஙனம், ஏறுமாறு ஏற்பட்டதும், பார்த்தாராம் பிரம சிவன். "அகோ வாரும்பிள்ளாய், அகத்தியனே! தென்கோடு உயர்ந்துவிட்டதால், நீ தென்னாடு சென்று அங்கே தங்கு, அப்போது பரதகண்டம், சமநிலை அடையும்" என்றுகூறினாராம். ஒரே சிரிப்பினால் மூன்று புரங்களையும் எரித்த முக்கண்ணனார், இந்தச்சமநிலை ஏற்பட, ஒரு சிட்டிகை விபூதியை எடுத்து வீசியிருக்கலாம், ஒரே ஒரு உருத்திராக்கத்தை வீசியிருக்கலாம், தெற்குநோக்கி. அவர், அகத்தியரின் எடைதென்னாட்டுப்பக்கம்ஏறினால்மட்டுமே, உயர்ந்த தென்[illegible] மீண்டும்சமநிலைபெறும் என்று கருதினார். இத்தகையதவறானகருத்தை அவர்கொண்டதால் தான்போலும், பித்தா! என்று அவரைப்பாடுகிறார்கள் பக்தர்கள்! அம்மொழிகேட்ட அகத்தியன், "ஐயனே! ஆலவாய் அப்பனே! நான் எங்ஙனம் தென்னாடுசெல்லமுடியும்? அது தமிழர் நாடாயிற்றே, அங்குதமிழிலே விசேஷ பாண்டித்யமடைந்த பெரும்புலவர்கள் இருப்பரே! நான்சென்று அங்கு தங்குவது முடியுமோ" என்று கேட்டாராம். "அப்படியானால், அகத்தியா! அருகேவா!" என்று சிவனார்அழைத்து அகத்தியருக்குத் தமிழ் உபதேசித்தாராம். இது புராணம். இதிலிருந்து அகத்தியர் வருமுன்னரே, தமிழ்நாட்டிலே தமிழ் ஓங்கிவளர்ந்திருந்ததென்பதும், அகத்தியன் போன்றவர்கள் வியந்துகூறக்கூடிய விதத்திலே வளம்பெற்றிருந்ததென்பதும், அகத்தியருக்குத் தமிழ்தெரியாதென்பதும், சிவனார் சொல்லிக்கொடுத்த பிறகே அகத்தியர் தமிழ் கற்றார் என்பதும் தெரிகிறதேயன்றி, அகத்தியர் தமிழ் வளர்த்தார் என்பது ஏற்படுகிறதா? தென்நாடு போந்ததால் அகத்தியர், சிவனார் கற்றுக்கொடுத்தஆரம்பதமிழைத்தான், வளர்த்துக் கொண்டிருக்கக்கூடும், தென்னாட்டுத் தமிழ்ப் புலவர்களிடம் பாடங்கேட்டு! அகத்தியர் தமிழைத் தமிழ் நாட்டிலே வளர்த்தார் என்பது புராணத்தின்படி பார்த்தாலும் பொருந்தவில்லை. பகுத்தறிவின்படி பார்த்தாலோ, படீர்என வயறுவெடிக்கும் இத்தகைய அபத்தக் கதைகளைக் கேட்டால். தமிழ் நாட்டுக்குத் தமிழை ஒருவர், வடநாட்டிலிருந்துவந்து கற்றுக்கொடுத்திருக்க முடியுமா? அது உண்மையெனில். தமிழ் நாட்டிலே தமிழ்தெரிந்ததற்கு முன்பு, வடநாட்டிலல்லவா தமிழ் பரவிற்று என்று பொருள். அது உண்மை எனில், தமிழறியாநாட்டுக்குத் தமிழ் நாடென்றும், தமிழ்வளம்மிக்க இடத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் இல்லாதிருந்

5ம் பக்கம் பார்க்க.

அளவில் மாறுதல்.

நமது பத்திரிகை இதுவரை கிவ்வுன் சைஸில் ஆறுபக்கங்களோடு வெளிவந்தது. இப்போது மார்க்கட்டில் கிடைத்த பேப்பர் டிம்மி சயிசாகையால், அளவில் சிறிது குறைகிறது. இக்குறையை நீக்க, இவ்வாரம் முதல் "திராவிடநாடு" எட்டுப்பக்கங்களோடு வெளிவருகிறதென்பதை மகிழ்ச்சியோடுவாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திராவிட நாடு

காஞ்சி 28—11—43 ஞாயிறு

அழகான சிலை! தலைதான் இல்லை!

என்ன அழகு! எவ்வளவு திறமை! உயிருள்ள உருவம் போன்றிருக்கிறது! இந்தச்சிலையினைச் சமைத்த சிற்பியின் திறமையை என்னென்று புகழ்வது! என்று, அந்தச் சிலையினைப் புகழாதார் இல்லை. குதிரைமீதேறிக்கொண்டு, ஒரு கையிலே வாளைப்பிடித்துக்கொண்டு மார்பினை முன்னிறுத்தி அமர்ந்திருக்கும் மாவீரனின் சிலை! குதிரையின் குளம்புமுதல், வாளின்கூர்மைவரையிலே, சிலையிலே விளங்குகிறது. ஆம்! சிற்பி தன்முழுத்திறமையுடன் அந்தச் சிலையைச் சமைத்தான். ஆனால்,அந்தச் சிலைக்குத் தலைமட்டும் இல்லை! அழகான சிலைதான், தலைதான் இல்லை, என்று கண்டோர்கூறிச் சோகிக்கின்றனர். இவ்வளவு கெம்பீரமாகக் குதிரைமீதமர்ந்துள்ள வீரனின்முகம் எவ்வண்ணமிருக்குமோ, விழியிலே கனல் கிளம்புவதையும், புருவம் நெரித்திருப்பதையும், மீசை துடித்திருப்பதையுங்கூடவன்றோ இவ்வளவுதிறமையுள்ள சிற்பி, விளங்கச் செய்திருப்பான். என்னபரிதாபம்! சிலைக்குத் தலைதானே இல்லை!! என்று கூறிக்கசியும் நிலையைத் தமிழர்பெறும் நடவடிக்கையொன்று நடைபெற்றிருக்கிறது—தஞ்சைத் தரணியிலே.

மூவேந்தருள் ஒருவரும், முத்தமிழ் வளர்த்தவரும், தமிழ்த் தரணியின் கொடியைத் தாரணியில் பல்வேறு இடங்களில் மதித்திடும்படியான நிலையை உண்டாக்கியவருமான, இராசராச சோழர்விழா, 7-11-43ல்தஞ்சை, பெரிய கோயிலில் கொண்டாடப்பட்டதாம். தமிழருக்குத் தமிழ்உணர்ச்சியும், நாட்டுப்பற்றும், பண்டைச் சீரும் சிறப்பும் உணர்வதால் ஏற்படும் எழுச்சியும், உண்டாக, இத்தகைய விழாக்கள் பயன்படும். ஆம்! அந்த நல்ல காரியத்தை, நடத்திய முறை இருக்கிறதே, அதுதான் சிலை அழகுதான், தலைதான்இல்லை என்றுநம்மைக் கூறிடச் செய்கிறது. நல்ல நோக்கம், நேர்த்தியான திட்டம், ஆனால், அந்நாள், வெறும் எடுபடிக்கும் பீடைநாளாக்கப்படலாமா? இராசராசன் விழாவிலே, சோழமன்னர்கள் வீரம், பெருமை, அறிவாற்றல், பர்மாவில் வெற்றிக்கொடி நாட்டியவீரம், வாணிபம்அவர்கள்காலத்திலேசெழித்திருந்த வரலாறு,கலையும் ஒளியும் மிகுந்திருந்த காட்சி என்பவைகள், மக்கட்குத்தக்கோரால்எடுத்துரைக்கப்பட்டு இருக்குமானல், தமிழர், தன்னுணர்வு வீரம், பெறமுடியும். கனகவிசயரைமுறியடித்துக்கல்கொணர்ந்த சேரன் செங்குட்டுவன்,கடற்படைகொண்டு பர்மாவை வென்ற இராசேந்திரன், கடாரம் வென்ற குலோத்துங்கன் போன்ற வீரத் தமிழ் மன்னர்களின் விழாக்கள், விலாமுறிந்துள்ள தமிழரின்உடலிலும் உள்ளத்திலும், புதுவிசைஉண்டாக்கச், சோர்வைப்போக்க, ஆர்வம் பிறக்க, ஆற்றல் ஊற்றெனப் பெருகப் பயன்படுத்தப்படவேண்டும். தமிழர் ஏதேதோ விழாக்கொண்டாடி, எடுப்பார் கைக்குழவியாகி, இயல்பிழந்து இடருற்றுத் தவிக்கும் இந்நாளிலே, தமிழகத்தின் பெருமையை விளக்கும் பெருநாட்களை முறையுடன், தமிழ் நாட்டினிடம் உண்மைப்பற்றுப் பிறக்கும் விதமாகக்கொண்டாடுதலன்றோ தக்கோர் செயலாகும். அதைமறந்தனர், தஞ்சைக் கோயிலிலேவிழாவாம், அதற்கொரு அனந்தநாராயணய்யர் தலைவராம்! கண்ணப்பர் கதைபற்றிப் பிரசங்கமாம், கிருபானந்தவாரியாரின் சொற்பெருக்காம்! இராசராசன் விழாவுக்கும் இந்தப் புராணக்குப்பைகட்கும் தொடர்புஉண்டாக்குவது, தமிழர்பணியாகுமா? சந்துவிட்டால்வந்துவிட்டேன் என்றுகூறிடும் ஆரியத்துக்கு, ஒரு சிறந்த வீரத்தமிழ்மன்னன் விழாவிலே இடமளிப்பதா? புராணப் பிரசங்கமன்றி, இராசராசன் விழாவுக்குரிய பொருள் ஆற்றுவார் தமிழகத்திலே இல்லையா! தமிழகவரலாறு, தமிழக வளம், தமிழ் வீரம், தமிழ் வாணிபம், முதலியனவற்றிலே வல்லுநர்இல்லையா? கண்ணை இழந்தவர் கதையும் காதளவு விபூதி பூசிக் கனகசபேசன் கூத்தினைப்பாடிய இராமலிங்கர் கதையுமின்றி, வேறொன்றுமறியாப் பராபரங்கட்குத் தமிழ் மன்னர் விழாக்களிலே இடந்தருவது, அவர்களுக்குப் பெருமை தரக்கூடும், செவிக்கு ஏதேனும் சத்தம் தேவை என்று நோக்குடையோருக்கு இன்பம் இருக்கும். ஆனால் தமிழ்நாட்டை எங்ஙனம் அது வளம்படுத்தும் என்று கேட்கிறோம். மறைமலைகளும், பாரதிகளும், ஆதிரேசர்களும், கலியாணசுந்தரரும் கேட்பாரற்றுகிடக்கிறார்கள். அவர்கள் அறியாரா, இராசராசன் வரலாற்றினை! அவர்கள் யாரும் காணோம்! தமிழ்வரலாற்று விளக்கம் காணோம்! வீரவணக்கவிழாக்காணோம்! விரிவுரைக்கு இருபுராணிகர்களும் தலைமைக்கு ஒரு ஐயரும், தஞ்சைத் தரணியில் கிடைத்தனர் போலும்!

இராசராசன் ஆண்ட தரணி, எவ்வளவு சீர்கேடடைந்தது என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும். இந்த நிலையிலே தமிழகம் இருத்தலாலன்றோ, தஞ்சையை அடுத்த திருவையாற்றிலே, சமஸ்கிருதக்கல்லூரிமாணவர்கள், தமிழ் மாணவருடன் இருந்துண்ணமறுத்து, இன்று, அரிசியும்பிறவும் படிபெற்றுத்தனியாகச் சமைத்து உண்கின்றனர். அந்தப்பேதம், அவ்வளவு அருகிலேயிருக்க,சமரசசன்மார்க்க போதமாற்றினராம் குகப்பிரியர், கிருபானந்தவாரியார்! இந்தப்பேதத்தைக் கண்டும் துடிக்காத உள்ளமும், உறுத்தாததோலும் படைத்ததமிழகத்துக்கு இராசராச சோழர் விழா ஒருகேடா! என்று கேட்கிறோம். வெட்கம், வெட்கம்!!

தமிழ்த் திருமணம்.

(14—11—43) ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு கள்ளந்திரித் தோழர் B. அழகர்சாமிக்கும் பழனி தோழியர் V. மாரியம்மாளுக்கும் மதுரை லாலா சத்திரத்தில் உசூர் சிரஸ்தார் தோழர். K. இராமாநுஜம் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அடியிற்கண்டவர்கள் ஷை திருமணத்தை ஆதரித்துப் பேசியபின் ஓர் சமபந்தி விருந்து நடைபெற்றது.

தோழர். K. B. ஜானகி அம்மாள் அவர்கள் அமரிக்கன் கல்லூரித் தமிழ் ஆசிரியர் தோழர் P. ஜோதிமுத்து M. A; B. D; அவர்கள் செயிண்ட் மேரி ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர் முத்துச்சாமிப் புலவர் அவர்கள், புதுமைக் குறள் ஆசிரியர் K. முத்துச்சாமி அவர்கள், தாலுகா பிரசாரகர் M. A. முத்திருளன் அவர்கள், பூவாளூர் தோழர் A. பொன்னம்பலனார் அவர்கள், நாஞ்சிநாடு தோழர் கிருட்டிணநந்தா அவர்கள். ஷை திருமணம் சீர்திருத்த முறையில் நடைபெறப்பெரும் பங்கு எடுத்துக்கொண்ட பொதுஜன வாசகசாலை உபதலைவர் தோழர் A. காசிவிஸ்வநாதன் முயற்சி பாராட்டத்தக்கது.

மட்டரகம்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி.)

கள் உடன்கிளம்பி விடுமா? என்ன மிரட்டல்! அதுவும் எந்தக்காலத்திலே!! ஆரியர்கள் சமர்த்தர்கள் என்பதற்கு ஹிட்லரை உதாரணம் காட்டுகிறீர். அடால்ப் ஹிட்லர், என்றையத்தினம் ஆரியஹிட்லராக அகம்பாவம் கொண்டானோ, அன்றே அவனுக்கு அழிவு காலம் கிட்டிவிட்டது. அவனை உன் இனத்தான் என்று பாத்யம்கொண்டாடுகிறீர், சற்றுப்பகிரங்கமாக அதைச்செய்தால், தொல்லை வரும், சட்டத்தினால்; போகட்டும், அந்த அழிவுவேலைக்காரன், மக்களைக் கொடுமை செய்யும் கடையன், சமதர்மத்தை அழிக்கவிரும்பும் சழக்கன், திமிர்பிடித்தலையும் தூர்த்தனை உனது இனம் என்றுகூறிப்பெருமை கொள்ளும், எனக்குத்தடையில்லை! போகுமா அந்தக்குணம்! நன்னிலத்திலிருந்து, ஜெர்மனிக்கு மானசீக யாத்திரை செய்து, ஆரியப்பெருமைக்குஹிட்லரை உதாரணம் காட்டும்நீர், பெரியார் இராமசாமி, சர்ச்சிலின் ஜலதோஷத்துக்குக்கூட, ஆரியமேகாரணம் என்று கூறும் தோரணையிலே எழுதுகிறார் என்று கேலிசெய்கிறீர், சர்ச்சிலின் ஜலதோஷத்துக்கும் ஆரியத்துக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர். பெரியார் அதுபோல்சொன்னதில்லை. அதுபோன்ற அர்த்தமற்ற சம்பந்தங்களை அவர் கூறினதுமில்லை. ஆரியஅவதாரபுருஷனாகிய இராமன், சம்புகனின் தவத்துக்கும் அக்ரகாரப் பிணத்துக்கும் சம்பந்தம் வைத்தது போல், ஈரோட்டு இராமன் சொன்னதில்லை. நன்னிலநண்பா,"பார்ப்பனராகிய நாங்கள் பணிவாகஇருக்கிறோம், தமிழரே எங்களைக் கண்டிக்கிறார்கள்". என்று எழுதியிருக்கிறாயே, அந்தப் பணிவு, உங்களுக்குப்பிறந்தது எதனால் என்பது உனக்குத்தெரியாதிருக்கலாம், தன்மானத்திலே அக்கரை காட்டாத தமிழர் உணராதிருக்கலாம், நாங்கள் அறிவோம் அதன் சூட்சமத்தை,"ஈரோட்டுப்பாணமடா, அது எங்கும்சென்றுபாயுதடா"என்று சிந்துபாடுவோம். உங்கள் பத்திரிகையைப்படிக்கும் தமிழருங்கூட இராமாயண காலட்சேபத்துக்குச் செல்கிறார்களே, என்று கேலிசெய்கிறீர். இராமாயண சத்தா காலட்சேபத்துக்கு மூன்றுவித கோஷ்டிகள் போவதுண்டு, ஒன்று ஆரிய மடைமையில் அமிழ்ந்துள்ள கூட்டம், மற்றொன்று "சாரபஹாரணர்த்தம்" செல்லும் கூட்டம். மூன்றாவதுகூட்டம் நீர் குறிப்பிடும் தோழர்கள். இவர்கள் அங்கு செல்வது, இராமாயணத்தைப்பற்றி நாங்கள் வெளியிடும் விஷயங்கள் உண்மையா என்பதைத் தெரிந்து கொள்ள! விஷயம் விளங்கியதும், நண்பா! இராமாயண பாராயணமே மகா சிரமமான காரியமாகிவிடும். உன்போன்ற தோழர்களின் கேள்விகள், அந்தநிலைமையை விரைவிலே உண்டாக்கும் என்ற நம்பிக்கையே உனக்காக இவ்வளவு சிரமம் எடுக்கச் செய்தது. சிந்தித்துப்பார், காலத்தை உற்றுநோக்கு, கண்திற, புதுவழியில் நட!!

தெய்வம் படி அளக்குதா?

"பசி"

"மரம் வச்சநாயன் தண்ணிஊத்துவான்" என்ற பேச்சு நம் நாட்டுப் பாமரமக்களிடையே மட்டுமின்றிப் படித்த தமிழரிடையேயும் பரவியிருந்து வருவது மிகவும் பரிகசிக்கத்தக்கதாகும். கடவுள் மீதுள்ள குருட்டு நம்பிக்கையால் எவ்வளவோ பாதகங்களையும், கொடுமைகளையும் நம் நாட்டுப் பாமரமக்கள் அநுபவித்து வருகின்றனர். அவர்கள், படித்த பண்டிதர்களானாலும் சரியே, கல்வியறிவில்லாத பாமரர்களிலும் கேவலமாகவே கருதவேண்டியவர்களாவர். அவர்கள் மூடத்தனமாக நம்பும் அந்தக் கடவுளே "உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனுக்கும் படியளந்து வருகிறதாகவும், மனிதன் என்னபாடு பட்டாலும் கடவுள் அன்றாடம் அளக்கும் படிக்கு அதிகமாக அடையவே முடியாதென்றும்; அசிரத்தையாகயிருந்துவிட்டாலும் "மரம் வச்சவன் தண்ணீர்ஊற்றுவதுபோல் தெய்வம் அன்றாடம் அளக்கிறபடியை அளந்துதான் தீரும்" என்று புராணஆதார பூர்வமாகக் கூறியும், நம்பியும், ஒருவித முயற்சியும்செய்யாது மூடத்தனமாக வாழ்ந்து பிறகு அதன்பலனாகிய வீழ்ச்சியை அடையும்போதும் அதே தெய்வத்தைத் தனக்குப் படிஅளக்கத் தவறிய குற்றத்திற்காகத் திட்டிக்கொண்டே மடிகிறான்.

அப்படித் திட்டுபவன் கூற்றைக் கேட்கும் மற்றமடையர்களும் மதிபெறுவதைவிட்டு, "அது அவன் தலைவிதி" செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நோவதாவது! என்றும் "காட்டில்வளர் பல கோடிக்குயிர் ஊட்டி வளர்ப்பவன் யாரோ......" என்றும் மௌடீகத்தின் அடிப்படையான பாறையில் மோதுண்ட முண்டனைப் போன்று முழங்குகின்றனர்.

அந்த முழுமூடர்களின் முகத்தை வங்காளத்தின் பக்கம்சற்றுத் திருப்பி வைத்துப் பார்க்கும்படி சொல்வோம். "தெய்வம் அங்குபடி அளக்குதா"? என்று அவர்களே கண்ணாரக்கண்டு பிறகு "தெய்வத்திற்கும் மனிதனுக்கும் ஏதாகிலும் வாழ்க்கையில் சம்பந்தம் ஏற்படவழியிருக்கிறதா? இல்லாத தெய்வத்தின் பேரால் உலகில் பாட்டாளி மக்களின் பழி ஏற்றோமே!" என்று எண்ணித்தம் மூடத்தனத்திற்காக மூக்காடு சூடட்டும்.

ஈரோட்டில்

"சந்திரோதயம்"

பெரியார், அவர்கள் தலைமையில் ஈரோட்டில் 19-11-43 இரவு சென்ட்ரல் தியேட்டரில் M. S. B. S. சபையினரின் ஜோடிப்புகளுடன், காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினர், "சந்திரோதயம்" நாடகத்தை விமரிசையாக நடத்தினர்.

குறிப்பு:—இதன் முழுவிபரமும், வரவு செலவு கணக்குகளும் அடுத்த இதழில் விரிவாக வெளியிடப்படும்.

விளம்பரம்.

செங்கற்பட்டு ஜில்லா முழுவதிலுமுள்ள லோகல் பண்ட்&றூரல் ஆஸ்பத்திரிகளுக்கு 1944வது வருஷத்துக்கு, தயார் செய்யப்பட்ட மருந்துகள், (இந்தியன்-சித்த-ஆயுர்வே-யூனனி) அங்கீகாரம்பெற்ற மருந்துச் சாலைகளிலிருந்து சப்ளைசெய்ய விரும்புவர்கள், சீல்போட்ட விண்ணப்பங்களை 15—12—1943-க்குள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.

விண்ணப்பக் காப்பிகளைக் கீழ்க்குறிப்பிடும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செங்கற்பட்டு டிஸ்ட்ரிக் போர்டு ஆபீஸ்,
சைதாப்பேட்டை.
21—11—43.

T. சண்முகம் பிள்ளை,
தலைவர், டிஸ்ட்ரிக்போர்டு.

மட்டரகம்.

4-ம் பக்கத்தொடர்ச்சி.

தமிழ் எந்த ரகமான ஆச்சரியம்? தமிழ்நாட்டுக்குத் தமிழ்போதிக்கும் ஒரு அகத்தியன் வாழ்ந்த வடநாட்டிலே, ஏன்தமிழ் அறவே காணோம்! தமிழ்நாட்டிலே தமிழ்பரவா முன்பு, இருந்த மொழிஎன்ன? என்ற இன்னோரன்ன பிறகேள்விகளைக் கேட்க நான் ஆரம்பித்தால், நண்பா! அகத்தியர் கதைகூறும் அன்பர்கள், பதுங்க இடந்தேடவேண்டும்! சரி, அகத்தியர் ஒரு ஆரியமுனிவர், வடவர், ஆரிய மார்க்க போதகராயிற்றே, அவர் பிராமணரை ஏனப்பா தூஷிக்கப்போகிறார்? அவர்தூஷித்தாரா, என்றுகேட்கிறாயே, பொருத்தமா? சனாதனம் சாக்கடைச்சேறு என்று சங்கராச்சாரி உபதேசம் செய்வாரா? அவர்தான் சனாதனசாகரவாசியாயிற்றே. அகத்தியர் ஆரியமுனிவரென்றால், ஆரியத்தை அவர் ஏன் கண்டிப்பார்! இதையும் ஒரு கேள்வி எனக்கருதினாயே, நான் வெட்கமடைகிறேன், நம்மிடம் நட்பு முறைவைக்கும் ஒருவர், இவ்வளவு குழப்பத்திலிருக்கிறாரே என்று.

ஒரு இடத்திலே, ஆரியத்திடம் விருப்போ, தமிழரிடம் வெறுப்போ இல்லாத தூய்மையுள்ளவன் நான் என்றுகாட்டிக்கொள்ளவிரும்பும்நீயே, மற்றோரிடத்திலோ, மறைதிரை நீக்கி விடுகிறாய். பரிவுபாசத்தாலோ, அன்பு ஆணவத்தாலோ நீ, "என்முன்னோர்களாகிய தபசிகள், ரிஷிகள் நாலுஜாதி வகுத்தனர்" என்று கூறுகிறாய். நண்பா! பேய்ச்சுரைக்குத்தேன்பெய்து பயன் என்ன? நீ, இடையிடையே சமரசமேற்பூச்சுடன் காட்சிதந்தும் பயன் இல்லையப்பா! "என் முன்னோர்களாகிய தபசிகள், ரிஷிகள்" என்று மார்தட்டுகிறாயே, அதுதான் ஆரிய இனஇயல்பு என்றுநான் அடிக்கடிகூறுகிறேன். விருப்பு வெறுப்பு அற்ற உனக்கே, அந்த இயல்பு போகமறுக்கிறதே, குளத்தங்கரைகளில் கொக்கெனக்குந்தியிருக்கும் உன் குலப்பிரமங்களுக்குப் போகுமா! இதை அறிந்தே டாக்டர் நாயர், சிறுத்தையின் தோலிலே உள்ளபுள்ளி மாறினாலும் பார்ப்பனரின் சுபாவம் மாறாது என்று ஓர்நாள் கூறினார். அவருடைய பேச்சை மெய்ப்பிக்க நன்னிலத்திலே ஓர் நடமாடும் ஆதாரம் இன்றுகாண்கிறேன். நீ குறிப்பிடும் தபசிகளும் ரிஷிகளும். நாலுஜாதியை வகுத்தனர் என்று கூறும்நீ, மற்றோரிடத்திலே, நாலுஜாதியை ஜனங்கள் வகுத்தனர் என்று கூறுகிறாய். இரண்டிலே எது உன் நம்பிக்கையோ தெரியவில்லை. ஆணுமின்றிப் பெண்ணுமின்றி இருத்தல் அழகல்ல. அபிப்பிராயங்களிலேயும் அலிப்பிறவிகள் உண்டு! அதை நான் விரும்புவதுகிடையாது.

தமிழர்களுக்கு ஜாதிகிடையாது. "ஜ"வும் கிடையாது. தமிழிலே, சாதி என்று ஏற்பாடு தமிழகத்திலே கிடையாது. நீ குறிப்பிடும் உனது முன்னோர்களாகிய தபசிகளும் ரஷிகளும், தவம்செய்வதையும், காமக்குரோதமத மாச்சரியாதிகளை அடக்குவதிலும் காலந்தள்ளாது, தமிழ் இனத்தைக் கெடுக்கும் திருத்தொண்டு புரியவேண்டியே, வர்ணாஸ்ரமத்தைப்புகுத்தினர். வகைகெட்ட மன்னர்கள் வளைவுகளுக்கு ஆசைப்பட்டு, [வளைவுகள் என்றால் விபரீத அர்த்தம்செய்யவேண்டாம், ஆரியர், மன்னர்களின் எதிரிலே வளைந்துநின்றுஏய்த்தனரே, அதனைத்தான் குறிப்பிடுகிறேன்] அந்த வர்ணாஸ்ரமத்துக்கு இடமளித்தனர், அதனால் இடர்ப்பட்ட தமிழர் இன்று அதனை அடித்து விரட்டுகின்றனர். தபசிகள்செய்த குற்றத்திற்கு என்னைத் திட்டுவதா? என்று கேட்கிறீர், பரிதாபத்தை எதிர்பார்த்து. நண்பரே! குற்றம்செய்த அந்தத்தபசிகளைக்கூசாமல் பெருமையுடன், எனது முன்னோர்கள் என்றுகூறினீரே, அந்தக்குல அபிமானம் இருக்கிறதே, அதைத்தான் கண்டிக்கிறோம். தபசிகள் செய்தது குற்றம் என்று வாயாரக்கூறுகிறீரேயன்றி, நெஞ்சாரஇல்லை. மனமார அந்த எண்ணமிருப்பின், பூர்வபெருமையைக்கூறிடத் துணியமாட்டீர். "என் பாட்டியார் தெரியுமோ, பத்தாவது கள்ளப்புருஷனுக்காக ஒன்பதாவதுபேர்வழியை ஓங்கிஅறைந்தவள்" என்று கூறிடும் கன்னியிடம். கனிவு யாருக்குத்தான்பிறக்கமுடியும், கூறும்! அந்தக் காலத்துத் தபசிகளாவது வேதமறிந்தோம், ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சம்பந்தமறிவோம், உலகை வெறுத்தோம், உலகுக்கு உபதேசிப்போம், என்றுகூறினர். அந்தப் பூர்வபெருமையைக்கூறி, அவர்களின் வழிவழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் உமது இனத்தவரிலே பலருக்குக் காயத்திரிதெரியாது, கனபாடியிடம் சிட்சை கிடையாது, வேதமோ வித்தையோ தெரியாது, என்றபோதிலும், வேதியகுலம் என்ற முடுக்கும், அதற்கான கௌரவாதிகளும் இருக்கிறதே, இதனை யார்தான் கண்டிக்கமாட்டார்கள்? பிரம்மத்தை உணர்ந்தவனே பிராமணன் என்பது சூத்திரம். பிழைக்கத் தந்திரமானவழியன்றிவேறொன்றுமறியாதவர்கள் பிராமணர்கள் இன்று. இதைக் கண்டிக்காமலிருப்பரோ! அந்தத்தபசிகள், நாங்கள் நந்தியுடன் விருந்துண்டோம், நாரதரின் கீதம்கேட்டோம், ஊர்வசியின் நடனம்கண்டோம் என்று மேலுலக விஷயம்பேசினர், பேதைகளை மிரட்ட. இன்று பட்லரின் சமயலை உண்டு, கோகில கானத்தின் இசை கேட்டு, ருக்மணி அருண்டேலின் நடனத்தைக்கண்டு வாழும் உன் இனத்தவர், பூர்வபெருமை பேசலாமா? உயர்ஜாதி, பிரம்மகுலம், என்ற வாரிசுபாத்யதை பொருந்துமா? தபசிகளின் மக்கள் என்றுகூறித் தர்ப்பையைக் காட்டித்தமிழரைஏய்த்திடலாகுமா? இதைக் காணும் என்போன்றார் சும்மா இருக்கத்தான் முடியுமா? நீரேகூறும்; கூறமாட்டீர்! மனதிலே யோசியும்! நாட்டைவிட்டுக் காடுசென்று, பர்ணசாலைகளிலே வசித்துக், காய்கனிகந்தமூலம் புசித்ததபசிகளின்வழிவழிகள் இன்று, பசோட்டாவிலே பட்லர் பட்சணத்தைப் பரிவுடன் தின்பதும், மேனாட்டாரின் மிருதுவான அணைப்பிலே சொக்குவதுமாக உள்ளனரே, மற்ற விஷயங்களிலே மாறியும், தமிழரை மமதையுடன் நடத்தும் அந்த இயல்பு மட்டும் இருந்திடக்கண்டால், யார்தானய்யா, கண்டிக்கமாட்டார்கள், "**உங்கள் முன்னோர்கள் வர்ணாஸ்ரமத்தை ஒப்புக்கொண்டனர். நீங்களும் அதன்படி நடவுங்கள்**" என்று கூறுகிறீர். அந்த அளவுக்கு; ஆரியம் உம்மிடம் ஊறி இருக்கிறது. வர்ணாஸ்ரமத்தை ஒப்புக்கொண்டவர் எவருமில்லை. அது தந்திரத்தால் திணிக்கப்பட்டுவிட்டது. மாயமென்றும் மந்திரமென்றும் மகேஸ்வரன் ஏற்பாடென்றும் கூறித்தமிழரைக் குலைத்தனர். அது, காடுமேடும் கட்டைவண்டியும், கஞ்சிக்கலயமும் அகல்விளக்கும் இருந்தபோது. இப்போது பறக்கும் விமானமும், பிரகாசிக்கும் எலக்ட்ரிக்கும், A. B. C. D. வைடமின் உணவுவகையும், ஜாதிபத்யத்தை விரட்டும் வீரமும் தோன்றிய காலமாயிற்றே, இந்தக் காலத்திலே அது நடக்க யார் அனுமதிப்பார்கள்.

"உனது முன்னோர் அந்தக் காலத்திலே இருந்ததுபோல், நீஏன் இருக்கக்கூடாது" என்று என்னைக் கேட்கும்நெஞ்சுறுதிபெற்றாயே, நண்பனே, அதேபேச்சை உனக்குநான் கூறினால், நீ, கிடைக்கும் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு, விந்தியமலையைக் கடந்து, கங்கை வெளிசென்று, அதையுந்தாண்டி, கைபர் கணவாயைக்கண்டு, அதன்வழியாக ஆசிய வெளிபோக வேண்டுமே, பூர்வீகம் அதுவல்லவோ, சம்மதமா, அதற்கு என்று கேட்கிறேன். ஏனப்பா, ஆப்பை அசைக்கிறாய்?

பார்ப்பனர்கள் தொன்றுதொட்டுச் சாமர்த்தியசாலிகள், எனவேதான் உயர்ந்தனர் என்று கூறுகிறாய். நீ எந்தச் சாமர்த்தியத்தைக் குறிப்பிடுகிறாயோ, தெரியவில்லை. சமர்த்தில், பலரகம் உண்டல்லவா? அதிலே எந்தச் சாமர்த்தியம் ஆரியருக்கு இலாபமளித்தது, சமூகவாழ்விலே முதல்

6-ம் பக்கம்பார்க்க.

மட்டரகம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம்பூலமளித்தது, அன்றும் இன்றும் வாழ்க்கையிலே வளம்தந்தது என்பதனை, ஆராயத் தொடங்குவோமா, நண்பா! நீஅதற்குத்தயாரா? என்று முன்கூட்டியே கேட்கிறேன், பிறகு, கைகளைப் பிசைந்துகொண்டு கண்ணீர் உகுத்திடாதே. எனக்குத் தெரியும் அந்தச் சாமர்த்தியம். பர்ணசாலைகளிலிருந்து தொடங்கிப் பங்களாக்கள் வரைவேண்டுமானால் ஆராய்வோம், உனக்குச் சம்மதமானால்! நண்பா! சாமர்த்தியம், என்பது பொதுவானபேச்சு. ஆல்கபோனின் சாமர்த்தியம் உலகப்பிரசித்தம்-திருட்டுத் தொழிலில். ஆனால் அதற்காகஅவனுக்குச் சிலையும் அபிஷேகமும் கிடைக்குமா? கூறு. இந்திரனின் சாமர்த்து, அகலிகையைக் கற்பழிக்க உதவிற்று! அந்தச் சமர்த்தையார் இந்தக் காலத்திலே, வேண்டுமென்பார்கள்? பத்துக்குடம் கள்ளானாலும் குடிக்கும் வெறியன், அதைத்தன் சமர்த்து என்றுதான் கூறுவான். கருங்கற் சுவரிலும் கன்னம் வைப்பவன், கணவன் தூங்குகையில்கள்ளப் புருடனைத் தேடுபவள், கோர்ட்டார் திணறும்படி கள்ளக் கையொப்பமிடுபவன், இவர்களெல்லாம் சாமர்த்தியசாலிகள்தான். ஆனால் சமூகம் இத்தீயர்களை ஏற்றுக்கொள்வதில்லை. சாமர்த்தியம் இருக்கிறது என்பதாலேயே உயர்வு கிடைத்துவிடாது. உலகப் பொதுநலனுக்கு ஊறுஉண்டாக்கும் விதமாக ஒருவனுடைய சாமர்த்தியம் இருக்குமானால், அவனுடைய சாமர்த்தியம் மக்களுக்குக் கேடு செய்யுமானால், அத்தகைய சமர்த்தை யாரும் போற்றமாட்டார்கள். ஒரு பூகம்பத்துக்கு இருக்கும் சக்தியும் சாமர்த்தியமும் எவ்வளவு! ஒரு நாட்டையே, ஆயிரக்கணக்கான சிற்பிகளின் திறனையே, ஒரு நொடியிலே அழித்துவிடும். ஒரு குலுக்கு, ஒரு குமுறல், அவ்வளவுதான் ஒருநாடே நாசம். இந்தச் சமர்த்துவேறு எதற்கு உண்டு! எனவே பூகம்பம் தலைசிறந்தது என்று பூஜிப்பரோ? ஒரு காலராக் கிருமி, தன்னைவிட எத்தனையோ மடங்கு பெரிதான ஒரு ஆளையே கொன்றுவிடும், சர்வசமர்த்துக்கொண்டது. காலரா கிருமிக்குக்காணிக்கை செலுத்துவரோ? இவ்வளவு ஏன், மூட்டைப் பூச்சியை வேட்டையாடிப்பார், எவ்வளவு சாமர்த்தியமாக, மேல்போர்வையிலிருந்து மெத்தையிலும், மெத்தையிலிருந்து தலையணையிலும், அதிலிருந்து நமது கையிலும், கையிலிருந்து, நம்சட்டையிலுமாக, ரோமலை விடச் சமர்த்தாகஓடி ஓடி ஒளிகிறது. அதற்காக, மூட்டைப் பூச்சிக்கு முடிசூட்டு விழாவா நடத்துவார்கள்? சாமர்த்தியசாலியா, அல்லவா என்பதல்ல முக்கியமான கேள்வி. ஜனசமுதாயத்துக்கு நன்மை பயக்கிறானா, கேடுசெய்கிறானா, என்பதே கேள்வி. அதைஎண்ணிப்பாரப்பா! ஒரு சிறு கூட்டம் உழைக்காமல் வாழ்வதும், உயர்ந்தோராக வாழ்வதும்; உல்லாசிகளாக வாழ்வதும், பெருங்கூட்டம் திண்டாடி வதைவதும், உமது இனத்தின் சாமர்த்தியத்தின் விளைவுஎன்றால், அந்தச் சாமர்த்தியத்தைச் சமூகத்துக்குச் சனியனாக வந்துசேர்ந்த கௌரிபாஷாணம் என்று தானே கூறுவர்.

தமிழரிலே, பிள்ளை இல்லாதவர்கள் பார்ப்பனர்களிடம் சென்று ஜோதிடம் கேட்கின்றனரே, இது ஏன் என்று கேட்கிறாய். உன் இனம்புகுத்தி வைத்திருக்கும் கற்பனைகள், தமிழனை இக்கதிக்குக்கொண்டுவந்து விட்டது. எனக்கு ஒரே ஒரு சந்தோஷம் இதிலே. உன் பக்திக்கும் பூஜைக்கும் உரித்தான இராமனுடைய தந்தை சென்ற அளவுக்குத், தமிழரிலே அடிமுட்டாளாக இருப்பவனும் இன்று வரை செல்லவில்லையே, என்ற சந்தோஷந்தான். அறுபதாயிரத்து மூன்றுமனைவிகளை அடைந்தும், தசரதன், புத்ரகாமேஷ்டி செய்தானமே, வால்மீகி கூற்றுப்படி. குதிரையைக் கொண்டு ஒருயாகம் நடந்ததாம், ஏதேதோ ஆபாசம் நடந்ததாகக் கதை இருக்கிறதே, அந்த அளவுக்கு, இழிநிலைஅடைந்த தமிழனும் போகவில்லை! உயர்குணத்துக்கு இருப்பிடமான தசரதன் போனவழியில் போகவில்லையே, என்றதிருப்திதான். ஜோதிடம், சடங்கு, முதலியன ஆரியத் திருப்பிரசாதங்கள், அவை, தன்னுணர்வுபெற்ற தமிழன்முன் தலைகாட்டுவதில்லை.

"தெருவில் நடப்பவன்கூட, அந்தப் பார்ப்பான் கடைக்குப் போகலாம், போண்டாவும் காப்பியும் நன்றாக இருக்கும் என்று பேசிக்கொண்டதை நான் காதால் கேட்டிருக்கிறேன்" என்று எழுதுகிறாய். உண்மைதான், தவறிய தமிழர்கள் அதுபோலப் பேசிக்கொள்வதை நானும் கேட்டிருக்கிறேன். அதுமட்டுமா? வேறு பல பல பேசுவதுண்டு. நானும் கேட்டதுண்டு, நீரும் கேட்டிருப்பீர். காப்பிக்கடையின் பெருமையைப் பட்டிக்காட்டான் பேசுவதை மட்டும் பகிரங்கப் படுத்தினீரே, ஏன் நண்பரே, மற்றவற்றை மறைத்துவிட்டீர்? "கோடிவீட்டுக் கோமளம், குலுக்கு நடைஅழகி, கொண்டையிலே செண்டழகி, பேச்சிலே சமர்த்து, சரசத்திலே முதல்தரம்," என்று பேசிக்கொள்ளும் தமிழ்க்காளைகளை நான் கண்டதுண்டு. "இதுஎன்னப்பா பிரமாதம்? கமலாவை முடிக்கவேண்டுமானால், காமாட்சி அம்மன்கோயில் குருக்களைச் சரிப்படுத்திவிட்டால் போதும்" என்று, நவக்கிரகப் பிரதட்சணத்தின்போதே பேசும் நவயுவர்கள் எனக்குத் தெரியும்.

"என்ன அநியாயம் தெரியுமடா? அந்த வேதாந்தாச்சாரியார் மகள் விமலா, விடோவாம். அவள் புருஷன் இறந்து விட்டானாம். மோட்டார் டிரைவர் மோகனசுந்தரம் அவளுக்கு ஜோடியாம். தங்கப்பதுமைபோல இருக்கிறாள்" என்று பேசும் பொறுமைக்காரர்களையும் பார்த்திருக்கிறேன். காகிதப் பஞ்சகாலத்திலே இத்தகைய காதற்கதைகளை எழுதமுடியவில்லை. நீரும், இதைப்போலப்பல, பலர் பேசிடக்கேட்டிருப்பீரே, இவ்வளவையும் விட்டுவிட்டு, ஏதோ எனக்குக் குத்தலாகக் கூறுவதாகக் கருதிக்கொண்டு, என் இனத்தவர் உமது இனத்தவரின் இட்லி சாம்பாருக்கும் காப்பிக்கும் இளித்துக் கிடப்பதைப் பிரமாதமானதாகப் பகிரங்கப் படுத்துகிறீரே, இந்நாக்கு ருசி கிடக்கட்டும், மற்றப்பேச்சுகளை மறைப்பது ஏன்? ஒழியட்டும், ஏதோ, நாக்குருசிக்காரனை மட்டும் நையாண்டி செய்தீர். இதற்குக்காரணம் என்ன? பார்ப்பனர் உயர்ந்தவர், ஆச்சாரமிக்கவர், அவர்களிடம் உணவு கொண்டால் சிலாக்கியம், என்ற அடிப்படையான எண்ணம், வர்ணாஸ்ரமத்தால் விளைந்தது, அதன் பலன், இன்று கபேக்களும், நிவாஸ்களும், விலாசங்களும், ஆரிய இனத்துக்கு, மிட்டா, மிராசு, ஜெமீன்கள் போல இலாபம் தருகின்றன. இத்தகைய பித்தம் தமிழருக்குக் கூடாது என்பது தான் எங்கள் பிரசாரம். அதை நீர் துவேஷம் என்று கூறுகிறீர், தடுக்க முயலுகிறீர், தமிழரின் நிலைகண்டும் கேலி செய்கிறீர், பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் போக்கு ஏன், என்று கேட்கிறேன். எனக்குச் சகோதர நிலையில் யோசனை கூறுகிறீரே, நீர் ஒன்று ஆரியநிலையிலாவது நின்று யோசியும், அல்லது பகுத்தறிவு வாதியாக மாறிப்பாரும். காலங்காட்டியின் கன உருண்டைபோல, நின்ற நிலையிலே ஆடிக்கொண்டே இருந்துவிடாதீர். "ஒரு தடவை இரண்டு தடவை பொறுத்துக் கொள்ளலாம், மறுபடி மறுபடி எம்மைத் தூஷித்தால், எமக்குக் கோபம் வராதா," என்று கேட்கிறீர். உங்கள் கோபம் எங்களுக்கு இலாபந்தான்.! ஆனால் கோபித்து என்னபயன்? என்ன செய்து விடமுடியும்? உங்கள் வேத புராண இதிகாசாதிகளை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு, இங்கிருந்து வெளியேறி விடுவீர்களா? அப்படிப் போய்விட்டாலும், சூரியசந்திராதி

(8 பக்கம் பார்க்க)

எதிர்காலமும், இளைஞரும்.

மணிமொழி.

இன்று உலகிலே பல பெருந்தலைவர்களால், அரசியல் பொருளாதார சமூக அறிஞர்களால் பேசப்பட்டு வரும் பொருள்களில் "எதிர்காலம்" முக்கியப்பிரச்சனையாக இருந்து வருகின்றது. எதிர்காலம் எப்படி அமைய வேண்டும்? அதன் அமைப்பு, அதன் சமூக, அரசியல், பொருளாதாரநிலை எவ்வாறு இருக்கவேண்டும்? என்பதைப்பற்றிப் பலர் பலவாறாகத் தங்களுக்குத் தெரிந்ததை விரும்பியவாறு பேசுகிறார்கள், பேசிக்கொண்டே இருக்கின்றார்கள்.

எதிர்காலஉலகின் படைப்புக் கர்த்தர்களெல்லாம் இளைஞர்கள். அவர்கள் காணும் கனவுகள் நினைக்கும் நினைவுகள், சிந்தும் இரத்தம், செயல்கள் ஒவ்வொன்றும்ஒவ்வொரு உலகைச்சிருஷ்டித்து விடுகின்றது. உலகம் இயங்குவதுகூட அவர்களால்தான். அவர்கள் இல்லையென்றால் உலகம் இல்லை. அவர்களே உலகம்; உலகமே அவர்கள். இந்த நிலையில் இளைஞர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு இனமும், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகுப்பும் தங்கள் இளைஞர்களைநம்பி வாழுகின்றன. இளைஞர் முன்னேற்றம் எந்த நிலையில் இருக்கின்றதோ, அந்தநிலையில் உள்ளது உலகின் நிலையும். இளைஞர்கள் முன்னேறிச்சென்றால் உலகமும் முன்னேறும். இளைஞர்கள், அறிவில், ஆராய்வதில், பகுத்தறிவில், விஞ்ஞானத்தில், இவ்வுலகஇயலைத் திருத்தி அமைப்பதில் கண்ணுங்கருத்துமாக இருப்பாரானால், அவ்வழியே உலகம் இருக்கும். இளைஞர்கள் அறியாமையில், முட்டாள்தனத்தில், காட்டுமிராண்டி வாழ்க்கையில் அக்கறை கொண்டு இவைகளே வாழ்க்கையின் வசீகரங்கள், அறிவின் சின்னங்கள் என்றிருந்தால் அவ்வழியே உலகும் இருக்கும்.

இன்று நடக்கின்றது போர். போரிலே இளைஞர்களின் இரத்தம் சிந்தப்படுகிறது. ஓர்நாட்டு இளைஞன் தன்நாட்டுடன் போர்புரியும் நாட்டை, அந்நாட்டு மக்களை, அவர்கள் மொழிதனை, அவர்கள் கலை நாகரிகம், அவர்கள்கண்ட உண்மைகள் அனைத்தையும் வெறுக்கின்றான். இது அவன் தன்நாட்டின் மீதுகொண்டுள்ள அன்பின் அறிகுறி. தன்நாட்டுப்பற்றுதன்னை இந்நிலையில்இருக்கச்செய்கின்றது. இவன்சிந்துகின்றான் இரத்தம் தன்நாட்டுக்காக, தன்மொழி, கலை, நாகரிகம், உரிமைகளைப் பாதுகாக்க. போர் முடிந்ததும் புது உலகம் பிறக்கும் என்று எல்லோரும் கூறுகிறார்கள். அந்தப் புதுஉலகம் எல்லோரும் இன்பமாய் இருக்கும் விதத்திலே அமையவேண்டும் என்பது மக்கள் வாழ்வின் நலத்தில் கண்ணுங்கருத்துமாயிருப்பவரின் விருப்பம். அவற்றிலே இன்று இருக்கும் இழிநிலை அகலவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும். பிறவியிலே உயர்வுதாழ்வு, சாதிபேதம், சமயபேதம் நிறபேதம், முதலியவைகள் இருக்கக்கூடாது. எவருடைய உரிமையும் பறிபோகக்கூடாது.

ஒவ்வொரு இளைஞனும் காணுகின்றான் கனவு உலகம் புதுமாதிரியாக அமையவேண்டும்என்று. உலகஇயலைத் திருத்தி அமைக்கவேண்டும், மக்கள் வாழ்வு நல்வாழ்க்கையில் அமையவேண்டும். வாழ்க்கை சுடுகாடாக இல்லாமல் நறுமணங் கமழும் மலர்களை, கனிகளைக்கொண்டதோர் சோலையாக மிளிரவேண்டும். பகுத்தறிவு பிரகாசிக்கவேண்டும். விஞ்ஞானம் விருத்தியாகவேண்டும், வாழ்க்கைக்குவேண்டிய வசதிகள் அனைத்தும் எளிதில் கிடைக்கவேண்டும். நம் இன்பத்தில் எந்தச்சக்தியும்தடைசெய்யக்கூடாது, இறப்பைத் தவிர.

இந்நிலையடைய அவன் எதையும் தியாகம்செய்யத் தயாராகிவிட்டான். எந்தக் கசடர்கள் இதற்கு எத்தடைவிதித்தாலும், அது எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அவற்றைச் சுக்குநூறாக்கித் தகர்த்தெறியத்தீர்மானித்துவிட்டான் உலகிலே முன்னேற்றத்திற்கு எல்லாக் காலங்களிலும் மதம் முட்டுக்கட்டையாக இருந்திருக்கின்றது, இருக்கின்றது. (Religion has always been a barto humanprogress- Ingersoll)வைதீகமார்க்கத்தின்அழிவுகாலம் நெருங்கிவிட்டது. மதஏகாதிபத்தியத்தினால், மற்றக்குட்டி ஏகாதிபத்தியங்கள் ஏற்பட்டன. இவைகளுக்கு மதம்உறுதுணையாகஇருக்கின்றது.வைதீகமதம்ஒழிந்தால் மற்றவை ஒழியும். எந்த நாட்டில் மதம் இல்லையோ அந்நாடு சுகித்திருக்கும்; இன்புற்றிருக்கும். அங்கு ஒருவிததுன்பமும் இன்னலும் இராது, உதாரணமாக ரஷியாவைப் பாருங்கள். அங்கு 1917ம் ஆண்டுக்குமுன் மக்கள் இருந்த நிலையும், இப்போது இருக்கும் நிலையும் எண்ணிப்பாருங்கள்; விளங்கும் மதத்தினால்விளைந்த தீமைகள். அது இல்லாததினால் உண்டான நன்மைகள். ரஷியாவில்மதமிருந்தால், கடவுளும், தரகரும் இருந்திருந்தால் அவர்கள் இவ்வளவு எளிதில் இமயமலை அவ்வளவு பலமுள்ள நாஜியை அடித்துத்துரத்தும் உரமும் ஊக்கமும் பெற முடியுமா! மதம் பேச்சுரிமைதர மறுக்கிறது. நீ நினைத்ததை, உணர்ந்ததை பிறருக்கு எடுத்துக்கூற உனக்கு உரிமையில்லை. பகுத்தறிவைப் பாழாக்குகிறது. இறந்தவர்கள் கூறிச்சென்ற கூற்றுகளை அப்படியே உண்மையென நம்பி ஏற்றுநடக்கும்படி ஏவுகிறது. இதுமதம் மக்களுக்கு இழைக்கும் இன்னல். ஆகையால் உலகிலே சாந்தி நிலவவேண்டுமானால், சாதிப்பூசல்கள், சமயப்பூசல்கள் ஒழிய வேண்டுமானால் முதலில் வைதீகமதம் ஒழியவேண்டும்.

பொருளாதாரத் துறையில் எல்லோரும் சமநிலையுள்ளவர்களாக இருக்கவேண்டும். உலகிலுள்ளபொருள்கள் எல்லாம் பொதுச்சொத்துக்கள். எவருக்கும் எதையும் சொந்த உரிமை கொண்டாட உரிமையில்லை. பிறக்கும்போது வெறுமனே பிறந்தோம். இறக்கும்போதும் வெறுமனே இறக்கின்றோம். இறப்பின் முன் எல்லோரும் சமம், ஒருவன் பணப்பெருக்கிலே மிக்குயர்ந்தவன் என்பதினால் காலம் அவன்ஆவியைப் பறிக்காமல் இருப்பதில்லை. பிறந்தவர் இறத்தல் இயற்கை, இதனைத் தடுக்கமுடியாது. ஆதலால் சொத்துரிமை கொண்டாடுவதுசுயநலம். மானிடத்துரோகிஎன்று கூடக்கூறலாம். ஆதலால் செல்வங்கள் மக்கள் நலத்திற்கு, இவ்வுலக இன்பத்திற்கு எல்லோருடைய பொதுப் பணிக்குப்பயன்படும் விதத்திலே செலவிடவேண்டும்.

அடுத்தபடியாக எல்லோரும் கல்வி கற்று வாழ்க்கைநலம் அனைத்தும், செவ்வனே, அனுபவிக்க வசதிகள், அமைக்கவேண்டும். கல்வியில், பகுத்தறிவில், விஞ்ஞானவளர்ச்சியில் தேர்ச்சிபெற்ற நாட்டினர், மற்றநாட்டினரை அத்துறைகளில் தேர்ச்சிபெறச்செய்யவேண்டும். இது மானிடராகப்பிறந்த ஒவ்வொருவருடைய தலையாய கடமை. உலகிலே அறியாமை அகன்றால், அறிவொளி சுடர்விட்டு எரிந்தால், பகுத்தறிவு பிரகாசித்தால்

(8ம் பக்கம் பார்க்க)

எதிர்காலமும் இளைஞரும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையிலே உலகம் ஒருஉன்னத பூந்தோட்டமாக மிளிரும் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே எல்லோரும் இந்தநிலைஅடைய மெய், வாக்கு, காயம் இவைகளால் ஒத்துழைப்போம், சமயம் நேர்ந்தபோது சமூகப் பிரச்சனைகளைப்பற்றி எழுதுவோம். சென்று வருகிறேன். வணக்கம்.

கைவல்யம் கடிதம்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிய வேதங்களில் கடவுளின் பேரால் சமயக்கொடுமையால், கிரியைச்சடங்குகளால், தமிழ்உரிமைபறிக்கப்பட்டுத் தலைகுனிந்து ஒன்றுக்கும் முன்நிற்க முடியாமல் ஒதுங்கிக்கிடக்கிறது.

தெய்வங்களுக்குக் கூடத் தமிழ் தெரியாதென்கிறீர்கள். தெய்வத்தினிடம் நீங்கள் இரகசியம்பேசினால் அதுகடவுளுக்கு விளங்காது, உங்கள் பாஷை தெரியாது, ஏற்றுக்கொள்ளவுமாட்டார் என்கிறீர்கள். நாங்களே உங்களுக்காக எங்கள்வடமொழியில் சொன்னால்தான் கடவுள் ஏற்றுக்கொள்ளுவார் சுத்தமாகுமென்கிறீர்கள். துளசிபத்ரம் சமர்ப்பயாமி என்பதை துளசியிலை போடப்படுகிறது என்று சொன்னால் கடவுள் கோபிப்பார்; உன்பருத்தி, துணி, நெல், முதலிய லாபமெல்லாம் போய்விடும் நரகத்திலும் போடுவார் என்கிறீர்கள். அப்பேர்ப்பட்ட கடவுளைத்தான் எங்களுக்குக் காட்டவும் செய்கிறீர்கள், ஏற்படுத்தியுமிருக்கிறீர்கள்.

செத்துப்போன எங்கள் முன்னோர்களுக்கு வடமொழிதெரியாது. அவர்கள் இழவு, எட்டு, கர்மாந்திரம், திவசம் முதலியவைகளுக்குத் தமிழ் தெரியாது வடமொழிதான் தெரியுமென்கிறீர்கள். பூலோகத்தில் சாகிறார்கள், பிதிர்லோகத்திற்குப்போகிறார்கள்என்கிறீர்கள், பூலோகத்திலிருந்து பிதிர்லோகம்போகுமிடை வெளிக்குள் தமிழைமறந்து வடமொழியை எப்படி ஐயா கற்றுக்கொண்டார்கள், இதைச்சொன்னால் வகுப்புவாதத்தைப் புகுத்துகிறார்கள் என்று சொல்லுவீர்கள். எங்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ கோவில்கள். ஒவ்வொரு கோவில்களிலும் எத்தனையோ தெய்வங்கள் குடியிருக்கின்றன. அத்தனைதெய்வங்களுக்கும்தமிழ் தெரியாமல் போகட்டும்; தமிழ் நாட்டு முருகன் தமிழுக்கு ஆசான்; "என்னுடைய அழகு முருகன்" அவருக்குக் கூட தமிழ் அர்த்தமாகாதென்கிறீர்கள். நான் படிப்பில் சொல்லில் இனிமையில் மகாபண்டிதனான கலியாணசுந்தரமுதலியார், "என் கழுத்தில் அநேகவிதபுகழ்மாலை நிறைந்து கிடக்கிறது. தமிழ்நாட்டுமுருகனுக்குக்கூடவா தமிழ்தெரியாது? தெரியும் என்று நான்சொன்னால் சபைத்தலைவர் இடத்தைக் காலிசெய்துவிட்டு தெய்வத்தின் மூலமாக வகுப்புவாதத்தைப் புகுத்துகிறார் முதலியார் என்பீர்கள். இவையனைத்தும் வகுப்புவாதக் கொடுமை என்று தங்களுக்குப்படவில்லையே? ஒருபாஷைக்காரன் இன்னொரு பாஷையை எங்களுடைய தாசிமகன் பாஷை என்றால் அதைவிட வகுப்புத் துவேஷ முண்டா? ஆச்சாரியாரே, அசம்பாவிதத்திற்கு நெடுங்காலம் இடம் கொடுத்துத் தங்கள் விதிகளே உலகவிதியென்று இனியும் பாவனை செய்தால் எப்போதாகிலும் திடீரென்று சரித்திரமானது ஒரு சிறியதடையில் இடறித் தலைகீழாகக் கவிழ்ந்துவிடுமென்பதை உலகமறியும். இவ்விதமும் இனியும் தங்கள் அறிவின் விலாசத்திற்குத்தகுந்தபடி உள்ளதைச்சொல்லி இருந்தீர்களானால் வாடிவதங்கி, உதிர்ந்து போகும் ரானடேஆல்மாலையா தங்கள் கழுத்தில் விழுந்திருக்கும். என்றும் வாடாத வதங்காதகாயாதபொன்மாலையல்லவா நூற்றிஇருபதுகாதத்துக்கு அப்பாலும் பிரகாசிக்கும். அடுத்த கடிதத்தில் இன்னும் எங்கள் சங்கதிகளைச்சொல்லி வகுப்புவாதம்தீரத்தாங்கள்வைத்திருக்கும் கலைஉணர்ச்சியையும் வளர்ச்சியையும் தெரிந்துகொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

கைவல்யம்.

பம்பாய் தென்னிந்திய ஆதித்திராவிட மகாஜன சங்கம்.

மேற்படி சங்கத்தின் நிர்வாக சபையின் கூட்டம் சங்கத்தின் தலைவர் S. R. ஷண்முகவேல் அவர்கள் தலைமையில் 12—11—43 இரவு நடந்தேறியது. வரவு செலவுக் கணக்குகளை ஒப்புக்கொண்டபின் சங்கத்தின் காரியதரிசி N. சிவபாண்டியன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் கங்காதேவி 9—11—43ல் திடீரென உயிர் நீத்தமைக்கு வருந்துவதாயும், அன்னார் குடும்பத்தாருக்கு சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழிசை,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணத்தை, மடைமையை, அடிமைத்தனத்தைத்தகர்த்தெறியும் பாடல்களைப்பாடுங்கள்; அதனால்தமிழர் முன்னேறட்டும். இந்தப்பெருந்தொண்டை நீங்கள் செய்வீரானால் தமிழர் உம்மை என்றும் மறவார். உமது பெருமை, புகழும், மதிப்பும், கீர்த்தியும்மாறாது, இந்த மாநிலத்தில் நிலைத்து நிற்கும் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

சர். ஏ. டி. பன்னீர் செல்வம் பகுத்தறிவுக் கழகம்

மேலப்பாளையம் 22—11—43

இவ்வூரிலுள்ள அஞ்சல் நிலையம் பார்ப்பனச் சேரியிலிருக்கிறது. பார்ப்பனர்கள் இவ்வளவு காலமாக அஞ்சல் நிலையத்தை தங்கள் சொந்த சொத்தாகப் பாவித்து வந்தார்கள். அவர்களின் முழு ஆட்சியும் அதன்மேல் செலுத்தி வந்தனர். ஆனால் அந்த ஆட்சி வீழ்ந்து, பொதுமக்களுக்கு இப்பொழுதான் பொது நிலையமாக இருந்து, வேலை செய்து வருகிறது. அஞ்சல் நிலயத்திற்கு ஆதிதிராவிட மக்கள் புறக்கடை வாயிலாகவந்து போய்க்கொண்டிருந்தனர். ஆனால் 18-11-43ல், வெள்ளிக்கிழமை மாலை 8-மணிக்கு அஞ்சல் நிலயத்தின் இன்ஸ்பெக்டர் உத்திரவின் பேரிலும் ஆதரவின் பேரிலும், அவர்முன்னே தாழ்த்தப்பட்ட மக்கள் தெருவில் நடந்தனர். அதுகாலை பன்னீர் செல்வம் பகுத்தறிவுக் கழக உறுப்பினர்கள் பாட்டுகள் பாடியும் சென்றார்கள். இப்பொழுது, ஆதித்திராவிட மக்கள் தாராளமாக, எவ்வித இடையூறுமின்றி மேன்மை தங்கிய அரசாங்கத்தின் உதவியின் பேரில் பொதுவழியில் சென்றும், வருகிறார்கள். இப்படி ஒவ்வொரு ஊரிலும் இச்சங்கத்தின் வழியாகவே அடையவழி கோருகிறோம்.

திராவிட வாலிபர் கழகம் மூவலூர்.

பெரியார்நாள் கொண்டாட்டம்.

இக்கழகத்தின் சார்பாக பெரியார் நாள் கொண்டாட்டம் 21—11—43 மாலை 6—30க்குத் தேரடிக்கருகாமையில் (பார்ப்பனர் சேரியில்) தோழர் M. தில்லைநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அஞ்ஞான்று மூவலூர் தோழியர் இராமாமிர்தத்தம்மாள், தோழர் இரா. சோமசுந்தரம், பட்டுக்கோட்டைத் தோழர் V. இரா. நெடுஞ்செழியன் (அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள்) முதலியோர் பெரியாரின் தொண்டையும் தன்னுணர்வியக்கத்தின் தன்மையையும் கொள்கை பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினார்கள். கூட்டம் இரவு 9-மணிக்கு நன்றிகூறலுடன் இனிது முடிந்தது.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.